# இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி.)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இ.க.நி. 3 – நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பணமும் வெளிப்படுத்தலும்**

நிதிக்கூற்றுக்கள் வழங்கப்படுவதற்கான முக்கிய கணக்கீட்டு எடுகோள்களும் மதிப்பீடுகளும் அங்கீகாரத் திகதியும் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இ.க.நி. 18 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (பீபீஈ)**

அதிகாரசபையின் குறித்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிராததுடன் தற்போதும் பிரயோகத்தில் உள்ள பூச்சியப் பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் இ.க.நி. 18 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பூச்சியப் பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வரலாற்றுக் கிரயம் ரூபா 16,388,545 ஆகக் காணப்பட்டது.

**(இ) இ.க.நி. 29 – வருமானம்**

வருமானம் தொழில்முயற்சியால் அதன் சொந்தக் கணக்கில் பெற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய பொருளாதார நலன்களின் மொத்த உட்பாய்ச்சல்களை மாத்திரமே உள்ளடக்கும். எவ்வாறெனினும், அதிகாரசபை அட்டுறு அடிப்படையில் கருத்திற்கொள்ளப்படாத காசு அடிப்படையிலான நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி தவிர்ந்த அதன் சகல வருமானங்களையும் இனங்கண்டுள்ளது.

**(ஈ) இ.க.நி. 30 சம்பந்தப்பட்ட தரப்பினரின் வெளிப்படுத்தல்கள்**

வேண்டப்பட்டவாறு சம்பந்தப்பட்ட தரப்பினர் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அம்பாந்தோட்டையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சூரியசக்தி பூங்காவின் கொடுக்கல் வாங்கல்களைக் கணக்கிடுகையில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறாகும்.

(i) சூரியசக்தி செயற்திட்டத்திற்காக 2009 திசெம்பர் 09 ஆம் திகதி அதிகாரசபை கொரியக் குடியரசுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகளின் படி அச் செயற்திட்டங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய அ.டொ. 3 மில்லியனில் உபகரணங்களுக்கு பெறப்பட்டிருந்த ஐக்கிய அ.டொ. 1,663,316 மாத்திரம் கணக்கிடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் ஐக்கிய அ.டொ. 3 மில்லியனிற்கு வழங்கப்பட்ட ஏனைய வசதிகள் மதிப்பிடப்பட்டிருக்காததுடன் கணக்கிடப்பட்டிருக்கவுமில்லை.

(ii) சூரியசக்தி பூங்காவின் 50 ஏக்கர் வரையான காணியை விஸ்தரிப்பதற்காக மஹாவலி அதிகாரசபையால் கையேற்கப்பட்ட காணி பெறுமதியிடப்பட்டிராததுடன் கணக்குகளுக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக அதிகாரசபையின் தலைவர் பின்வருமாறு கூறியிருந்தார்.

''அதிகாரசபையின் காணியைச் சுவீகரிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் காணியின் உறுதி மஹாவலி அதிகாரசபையிலிருந்து இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. காணிச் சுவீகரிப்புச் செயற்பாடு பூர்த்தியடைந்ததையடுத்து நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு 2008 மார்ச் 31 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2008 - 2009 காலப்பகுதியின் போது சம்பிரதாயமற்ற மீள்சுழற்சி சக்தி உற்பத்தியாளர்களின் மின்சக்தியைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 897,025,919 தொகை கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

எனினும் இது தொடர்பாக அதிகாரசபைத் தலைவர் பின்வருமாறு கூறியிருந்தார்.

''திறைசேரியின் நிதி மற்றும் திறைசேரியின் அங்கீகாரத்தின் கீழ் செஸ், இறைகள் முதலியவற்றிலிருந்து பெற்ற பெறுவனவுகளின் மூலம் நிதி வழங்கப்பட்டிராவிடின் தற்போது நிலைபெறுதகு வலு அதிகாரசபை இச் செலவினத்தை ஏற்பதற்கு இயலாது''.

(இ) மின்சக்தி நிதியத்திலிருந்து ரூபா 28,861,798 தொகை வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டு 2010 ஆம் ஆண்டின் போது உழைக்கப்பட்ட ரூபா 608,661 தொகையான வட்டி மின்சக்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது அதிகாரசபையின் வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டின் போதும் இது சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2008 ஒக்டோபர் 01 ஆம் திகதி நிலவிய ரூபா 15,023,944 தொகையான அரசாங்க மானியம் பிற்போடப்பட்ட மானியமாக கருதப்பட்டிருக்கவில்லை. அன்றைய தினத்தில் அம் மானியங்களில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள், இயந்திர

உபகரணங்களின் புத்தகப் பெறுமதி ரூபா 14,095,553 ஆகும். எவ்வாறெனினும், அச் சொத்துக்கள் தொடர்பில் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்ததுடன் அச் சொத்துக்களின் புத்தகப் பெறுமதிக்குச் சமனான பெறுமதி 2010 சனவரி 01 இல் உள்ளவாறு உரிமை மாற்றக்கூற்றின் தேறிய மீதியுடன் சீராக்கப்படுவதற்குப் பதிலாக 2011 ஆம் ஆண்டின் போது திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் தேறிய பற்றாக்குறையும் திரண்ட நிதியமும் ரூபா 14,095,553 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) இலங்கை நிலைபெறுதகு வலு நிதியம் மற்றும் இலங்கை நிலைபெறுதகு வலு உறுதிப்படுத்தல் நிதியத்திற்காக சேர்க்கப்பட்ட நிதி முதலீடு செய்யப்பட்டு 2008 – 2011 காலப்பகுதியின் போது உழைக்கப்பட்ட வட்டியான ரூபா 30,426,250 உரிய நிதியை விஸ்தரிப்பதற்காக மீள முதலீடு செய்யப்படாது அதிகாரசபைச் செலவினத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) வேலை பூர்த்தி செய்யப்படாத காற்றாடிகளின் கம்பங்களுக்கு உரித்தான உபகரணங்களின் கிரயம் தவறுதலாக ஆதன, கிரய மற்றும் உபகரணத்தின் கீழ் கணக்கிடப்பட்டிருந்ததுடன் இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காணப்படும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் மற்றும் ஆதன, கிரய மற்றும் உபகரணங்கள் ரூபா 1,419,000 ஆல் முறையே குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2010 ஆம் ஆண்டின் போது மூலதனமாக்கப்பட்ட 5 காற்றாடிக் கம்பங்களில் ஒரு கம்பம் முற்றாக பாதிக்கப்பட்டிருந்ததுடன் இது நிலையான சொத்துக்களில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட நிலையான சொத்துக்களான ரூபா 2,377,000 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2011 ஆம் ஆண்டின் போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையின் (டபிள்யூஐபி) கீழ் ரூபா 15,523,945 தொகை கணக்கிடப்பட்டிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையாக ரூபா 38,301,046 தொகை கணக்கிடப்பட்டிருந்தது. ஆகையால் காசுப்பாய்ச்சல் கூற்றில்

முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவான தேறிய காசு உட்பாய்ச்சல் ரூபா 22,777,101 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) வட்டி வருமானத்தின் காசுப் பாய்ச்சல் ரூபா 5,611,777 ஆன போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு ரூபா 5,128,721 ஆக எடுக்கப்பட்டிருந்தது. ஆகையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்ட முதலீடுகளினால் உருவான காசுப் பாய்ச்சல் ரூபா 483,056 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) தவறாகக் கணிப்பிடப்பட்ட காரணத்தினால் காசுப் பாய்ச்சற்கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள மூலதன மானியங்களிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 5,019,888 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) 2011 ஆம் ஆண்டின் போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைக் கணக்கிலிருந்து ஆதனங்கள், பொறிகள், உபகரணக் கணக்கிற்கு மாற்றப்பட்ட வேலை பூர்த்தி செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 53,824,991 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் தவறாக ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணக் கொள்வனவாகக் கருதப்பட்டிருந்தமையால் காசுப்பாய்ச்சற் கூற்றில் காணப்படும் முதலீட்டுச் செயற்பாடுகள் அத் தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டன.

(ஔ) 2009 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு உதவியாக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 24,169,380 தொகையான வலு உபகரணம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வலு உபகரணங்களுக்கு உரித்தான பெறுமானத்தேய்வு மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பிற்போடப்பட்ட மானியம் மற்றும் வலு உபகரணங்கள் ரூபா 22,493,705 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2009 திசெம்பர் 29 ஆம் திகதி பெறப்பட்ட பெறுமதி ரூபா 838,500 தொகையான வலு உபகரணங்கள் 2011 ஆம் ஆண்டின் போது முற்றாகப் பெறுமானத்தேய்விடப்

பட்டிருந்ததுடன் அந்த மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் தேறிய மிகைக்கு சீராக்கப்பட்டிருந்தது. தவறான கணக்குகள் சீராக்கப்பட்டதன் காரணமாக 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகை மற்றும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் பற்றாக்குறையும் ஆதனங்கள், இயந்திர மற்றும் உபகரணம் முறையே ரூபா 559,000 ஆலும் ரூபா 279,500 ஆலும் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) பிராந்திய ஒளியூட்டல் நிலையத்திற்கு (ஆர்சீஎல்) வேறாக கணக்கிடப்பட வேண்டிய பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

| **விடயம்** | **பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| மூலதனச் செலவினம் | 10,416,735 |
| மீண்டெழும் செலவினம் | 20,493,912 |
| கூட்டுத்தொகை | 30,910,647 |

(கா) வழக்கமாக, மதிப்பீட்டுத் தவறுகள் நிலவும் ஆண்டின் போது சீராக்கப்பட வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டு சீராக்கமாக கருதப்படத்தேவையில்லை. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் பெறுமதி ரூபா 773,757 தொகையான பணிக்கொடைக் குறை ஏற்பாடு தவறுதலாக முன்னைய ஆண்டுச் சீராக்கமாகக் கருதப்பட்டிருந்ததுடன் வருமானக் கூற்றில் வேறாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கி) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட முறையே பற்றாக்குறையும் தேறிய மிகையுமாக உரிமை மூலதனக் கூற்றுடன் இணங்கியிராததுடன் அவ்விரண்டு தொகைகளுக்கு இடையேயான வேறுபாடு முறையே ரூபா 773,757 ஆகவும் ரூபா 3,739,868 ஆகவும் பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

| விபரம் | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| வருமானக் கூற்றின் பிரகாரமான மிகை/ (பற்றாக்குறை) | (31,405,292) | 7,023,548 |
| மூலதனக் கூற்றின் பிரகாரமான மிகை/ (பற்றாக்குறை) | (30,631,535) | 3,283,679 |
| வேறுபாடு | 773,757 | 3,739,868 |

### 1.2.3 காரணம் வெளிப்படுத்தப்படாத வேறுபாடுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல. 14 மற்றும் 10 இல் காண்பிக்கப்பட்ட காலக்கழிவு செய்யப்பட்ட பிற்போடப்பட்ட மானியங்களின் தேறிய வேறுபாடு ரூபா 2,792,181 இற்கான காரணங்கள் காண்பிக்கப்படுவதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| விபரம் | தொகை |
|---|---|
| | ரூபா |
| காலக்கழிவு செய்யப்பட்ட பிற்போடப்பட்ட மானியங்கள் | |
| நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல. 14 இன் படி | 106,395,700 |
| நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல. 10 இன் படி | 89,507,966 |
| | 16,887,734 |
| வேறுபாடு | |
| கழி: தவறாகச் சீராக்கப்பட்ட பெறுமானத்தேய்வு (தொடர்பு : இந்த அறிக்கையின் 2.2.2(இ) பந்தி) | 14,095,553 |
| தேறிய வேறுபாடு | 2,792,181 |

**1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

மீளாய்வாண்டின் வருமானக் கூற்றிற்கு மாற்றப்பட்ட ரூபா 106,395,700 தொகையான பிற்போடப்பட்ட வருமானம் கணிப்பிடப்பட்ட விதம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

**(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம்**

(i) 8(1) ஆம் பிரிவு – மீளாய்வாண்டில் அதிகாரசபையின் வருடாந்த பாதீட்டுப் பதிவேடு பணிப்பாளர் சபையினால் 2011 சனவரி 28 ஆம் திகதியே அதாவது 3 மாதகால தாமதத்தை அடுத்தே அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ii) 14(1) ஆம் பிரிவு – நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த வரைவு அறிக்கை 2012 ஆகஸ்ட் 02 ஆம் திகதியே அதாவது 6 மாதகால தாமதத்தை அடுத்தே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை அதிகாரச்சட்டம்**

(i) 46(2) ஆம் உப பிரிவு – விண்ணப்பக் கட்டணம் தவிர்ந்த திரண்ட நிதியத்தின் ஆரம்ப மூலதனம், செஸ் நிதியத்தின் நிதி (45 ஆம் பிரிவு) ஆகிய செயற்பாடுகளில் நிதியைச் சேகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

இது தொடர்பாக அதிகாரசபைத் தலைவர் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தார்.

"அதிகாரசபையில் ஆரம்பத்தில் இருந்து சகல பாதீடும் தயாரிக்கப்படுகையில் இத் உப பந்தியின் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு பிரேரணைகள் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறெனினும், மேலும் பொசில் எரிபொருள் கிரயத்தை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்யும் இவ் அளவீட்டிற்காக அங்கு தொடர்ந்திருக்கும் தரப்பினர் உடன்பட்டிருக்கவில்லை.

(ii) 46.3(அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) ஆம் பிரிவுகள் - பெறுமதி ரூபா 96,856,634 தொகையான நிதி, அதிகாரச்சட்டத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ள பின்வரும் நோக்கங்களுக்காக ஈடுபடுத்தாது 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி சேமிப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

- சக்தி மாற்ற திட்டத்தின் அடிப்படையிலான தெரிவு செய்யப்பட்ட புதுப்பிக்கத்தக்க சக்திக்கான உதவி மானியங்கள்

- சக்தி வினைத்திறன் சாதனங்கள் மற்றும் தொழில் நுட்பங்களின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான உதவி மானியங்கள்

- கைத்தொழில் நீர் மின்சக்தி பிரயோகித்தலுட்பட எரிபொருள் ஆரம்பத்திற்கான மூலதன உதவித் தொகை

- விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்

- புதுப்பிக்கக் கூடிய சக்தி வளங்களைப் பயன்படுத்தி ஊக்கப்படுத்துவதற்காக ஏதாவது சங்கம் அல்லது சமூகத்திற்கான ஊக்குவிப்புக்கள் அல்லது அதே மாதிரியான நிதி உதவிகள்

இது தொடர்பில அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பின்வருமாறு உரைத்திருந்தார்.

அதிகாரசபையின் ஆரம்பம் முதல் ஒவ்வொரு பாதீடும் தயாரிக்கப்படுகையில் உப பிரிவின் ஏற்பாடுகள்

செயற்படுத்தப்படுவதற்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், இம் முயற்சிகளிலிருந்து விளைவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதிகாரசபை ஆரம்பம் முதல் அதிகாரசபையின் நோக்கங்களும் இணைத் தீர்மானங்களும் பாதீட்டுப் பிரேரணைகளிற்குள் உள்ளடக்கப்படுவதற்கு பாதீட்டுக் கொள்கைத் திணைக்களத்திற்கும் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு - நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையின் செயற்பாடுகளின் விளைவு ரூபா 31,405,292 தொகையான பற்றாக்குறையானதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டில் ரூபா 7,023,548 தேறிய மிகையுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 38,428,840 ஆன வீழ்ச்சியைக் காட்டியது. மீளாய்வாண்டிற்காக எதிர்வுகூறப்பட்ட வருமானம் கூடுதலாக மதிப்பிடப்பட்டதன் காரணமாக அரசாங்க மீண்டெழும் மானியம் குறைவடைந்து முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களால் ஏற்கப்படும் வழமையான மற்றும் செயற்திட்டங்களுக்கு உரித்தான மீண்டெழும் செலவினங்கள் அதிகரித்தமை நிதி விளைவுகள் வீழ்ச்சியடைவதற்கு முக்கிய காரணமாகியது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விடயம் | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| ஏனைய வருமானம் | 31,278,917 | 29,059,774 |
| செயற்திட்ட செலவுகள் தவிர்ந்த மொத்த மீண்டெழும் செலவினம் | (76,589,930) | (65,107,881) |
| நிருவாகச் செலவுகளிற்கான மீண்டுவரும் மானியம் மற்றும் செயற்திட்ட செலவினத்திற்கான மூலதன மானியம் என்பவற்றைச் சீராக்க முன்னர் வருமானத்தை மிஞ்சிய செலவினம் | (45,311,013) | (36,048,107) |
| மூலதன மானியம் மற்றும் மூலதன செயற்திட்டங்களிலிருந்தும் மாற்றப்பட்ட | | |

| | | |
|---|---|---|
| செலவினம் என்பவற்றுக்கிடையில் எழுந்த தேறிய மிகை/ (பற்றாக்குறை) | (17,320,522) | (3,668,345) |
| நிருவாக செலவுகளிற்கான மீண்டெழும் மானியம் சீராக்க முன்னர் வருமானத்தை மிஞ்சிய செலவினம் | (62,631,535) | (39,716,452) |
| | ------------------ | ------------------ |
| நிர்வாகம் செலவுகளிற்கான மீண்டெழும் மானியம் | 32,000,000 | 46,740,000 |
| | ------------------ | ------------------ |
| தேறிய மிகை/ பற்றாக்குறை | (30,631,535) | 7,023,548 |
| | =========== | =========== |

மேற்படி பகுப்பாய்வின் படி அரசாங்க மானியத்தைச் சீராக்க முன்னர் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை முறையே ரூபா 45,311,013 மற்றும் ரூபா 36,048,107 ஆக இருந்தன. எவ்வாறெனினும், அரசாங்க மானியத்தைச் சீராக்கிய பின்னர் இது மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக முறையே ரூபா 30,631,535 பற்றாக்குறையாகவும் ரூபா 7,023,548 மிகையாகவும் மாற்றமடைந்துள்ளது. இதன் படி, முழுமையாக, திறைசேரி நிதிகளில் அதிகார சபை தங்கியுள்ளமை சான்றுபடுத்தப்படுகிறது.

இது தொடர்பாக அதிகாரசபையின் தலைவர் பின்வருமாறு உரைத்திருந்தார்.

‘‘ இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையானது நாட்டின் நிலைபெறுதகு வலுவை மேம்படுத்துவதற்கும் கல்வி வழங்கலிலும் ஈடுபட்டுள்ளது. மேலும் நிலைபெறுதகு வலு செயற்திட்ட சட்டமயமாக்கலுக்காகவும் செயற்படுகின்றது. வலு அனுமதிப்பத்திரம் ஆகியவற்றின் மூலம் உருவாகம் வருமானத்திலிருந்து கூடியளவு தொகை வலு நிதியத்திற்கு வைப்புச் செய்யப்படுவதுடன் அதிகாரச்சட்டத்தில் விபரிக்கப்படும் விசேட செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்படுகிறது. அம்பாந்தோட்டை சூரிய சக்திச் செயற்திட்டத்தினால் மாத்திரம் உழைக்கப்பட்ட வருமானம் விசேட பகுதிகளில் உள்ள நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் மூலதன செயற்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படக்கூடியதாக உள்ளது. இந்த வருமானம் வருடாந்தம் ரூபா 40 மில்லியன் தொகைக்கு வரையறுக்கப்பட்ட போதிலும் இத் தொகையிலும் பார்க்க மூலதனச் செயற்திட்டப் பாதீடு அதிகரித்துள்ளது. மறுபக்கத்தில் இலங்கை

நிலைபெறுதகு வலு அதிகாரசபையானது மீள மறுசீரமைக்கப்பட்டு விருத்திசெய்யப்படுவதற்காக புதிய பதவியினரை ஆட்சேர்த்து அலுவலக வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் தேவைப்படும் காரணத்தால் மீண்டெழும் செலவினம் அதிகரித்துள்ளது. மேலும், அதிகாரச்சட்டத்தால் அனுமதியளிக்கப்பட்டுள்ள செஸ், இறை போன்ற நிதி உருவாக்கிக்கொள்ளக்கூடிய செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கும் திறைசேரி இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைக்கு இதுவரை அனுமதி வழங்கவில்லை. ஆகையால் அதிகாரசபை சுயமாக நிதியீட்டும் நிறுவகமாக முடியாத நிலையில் உள்ளது.''

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 பிரதேச ஒளிமயமாக்கல் நிலையம்

ஆக்கபூர்வமான ஒளிமயமாக்கல் முறைமையினூடாக விரிவான நலனைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் 2009 ஏப்ரல் மாதத்தின் போது அதிகாரசபையால் ஒளிமயமாக்கல் தொடர்பான வலய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சின் கீழ் அல்லது அதிகாரசபையின் கீழ் வேறான ஓர் பிரிவாக நிலையம் செயற்படுத்தப்படுவதற்கு இது வரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, 2011 ஆம் ஆண்டின் போது இந் நிலையம் அதிகாரசபையின் கீழ் வேறான நிலையமாக செயற்படுவது அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பாக அதிகாரசபையின் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

''ஒளிமயமாக்கல் ஆக்கபூர்வத்தை மேம்படுத்தும் விளைவாக வலு சேகரிப்பு, இலங்கை மின்சார சபை நேரடியாக நலனை வழங்குவதால் 2012 இறுதி அரையாண்டின் போது அமைச்சின் கோரலில் நிலையத்தின் செயற்பாட்டையும் முகாமைத்துவத்தையும் இலங்கை மின்சார சபை பொறுப்பேற்றிருந்தது''.

(ஆ) கொம்பக்ட் பிளோரசன்ட் மின்குமிழ்களுக்காக (ஊகுடு) திட்டமிடப்படாத இயந்திரம் காரணமாக 2011 அதிகாரசபையின் கொம்பக்ட் பிளோரசன்ட் மின்குமிழ்கள் பரீட்சிக்கப்படுவதற்கு ஸ்தாபிக்கப்பட்ட ஆய்வுகூடத்தில் இருந்து ரூபா 12.3 மில்லியன் தொகையான இலக்கிடப்பட்ட வருமானம் பெற்றுக்கொள்ளப்படுவது வெற்றியளிக்கவில்லை. மேலும், 2011 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அதிகாரசபை ரூபா 30,249,692 தொகையைச் செலவிட்டிருந்த போதிலும் கடந்த இரு ஆண்டு காலப்பகுதியின் போது குறித்த நோக்கங்களுக்காக நிலையம் ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக அதிகாரசபையின் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

முதல் இரு ஆண்டுகளின் போது செயற்பாட்டுப் பணிகளிலிருந்து நிலையத்தின் நோக்கங்கள் மேற்கொள்ளப்பட முடியாதிருந்த போதிலும் ஒளிமயமான ஆய்வுகூடத்தை ஸ்தாபித்துள்ளதுடன் உபகரணக் கொள்வனவிற்காக பணத்தைப் பெற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருந்தது. மேலும் பயிற்சி வசதிகளும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

### 2.2.2 மூன்று பிரோட்டோ வகை மின்னியக்க மோட்டார் வாகன அபிவிருத்தி

ரூபா 9 மில்லியன் பெறுமதியான மூன்று பிரோட்டோ வகை மின்னியக்க மோட்டார் வாகன அபிவிருத்தி செய்யப்படுவதற்காக 2007 செப்தெம்பர் 28 ஆம் திகதி அதிகாரசபை தனியார் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தியிருந்தது. இதன் பிரகாரம், உடன்படிக்கைத் திகதி முதல் 18 மாதங்களுக்குள் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

உடன்படிக்கையின் படி, செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட வேண்டிய திகதி 2009 மே 31 ஆம் திகதியாகும். எவ்வாறெனினும், மின்னியக்க மோட்டார் வாகனங்கள் மூன்றில் ஒன்றேனும் மேம்படுத்தப்படுவதற்கு அக் கம்பனிக்கு முடியாது போன போதிலும் இதற்காக உடன்பட்ட தொகையில் ரூபா 7.824 மில்லியன் தொகையான அதாவது 86.93% செலுத்தப்பட்டிருந்ததுடன் 2012 மே 31 ஆம் திகதியளவில் 56 மாதங்கள் கடந்திருந்தன. இத் தாமதம் தொடர்பாக இக் கம்பனிக்கு தாக்கம் ஏற்படுத்தப்படாமையால் முறையான காலப்பகுதி நீடிக்கப்படாது செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 பத்து காற்று அளவீட்டு கம்ப வழங்கல், நிர்மாணிப்பு, பொருத்துதல் மற்றும் வடிவமைப்பு

------------------------------------------------------------------------------------------------------------------------------

4 மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் காற்று அளவீட்டுக் கம்பங்கள் ரூபா 16,675,000 இற்கு வழங்கல், பொருத்துதல் மற்றும் ஸ்தாபித்தலுக்காக அதிகாரசபை, தனியார் கம்பனி ஒன்றுடன் 2008 யூலை 14 ஆம் திகதி உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம், செயற்திட்டக் காலம் 12 மாதகாலமானதுடன் வேலை பூர்த்திசெய்யப்பட்டமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டதை அடுத்து தவறுகளுக்கான பொறுப்பு மற்றும் பராமரிப்புக் காலத்திற்காகவும் 12 மாதங்கள் கடந்திருந்தன. ஒப்பந்தப் பெறுமதிக்கு மேலதிகமாக அதிகாரசபையால் உபகரணங்களும் ஏனைய உதிரிப்பாகங்களுக்குமாக ரூபா 7,095,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 10 கம்பங்களில் 4 மாத்திரம் செயற்திட்டக் காலத்தின் போது பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய கம்பங்கள் கபரகல தவிர குறித்த தினத்திற்கு 2 ஆண்டுகளின் பின்னர் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக அதிகாரசபைத் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"அளவீட்டுக் கம்பங்கள் தொடர்பாக சிறந்த அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக இத்தகைய தன்மைவாய்ந்த செயற்திட்டங்களை சூட்சுமமாக ஸ்தாபிக்க வேண்டியுள்ளது. இதன் பிரகாரம், ஏற்ற அளவீட்டு துறைகளைத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக குறிப்பிட்டளவு காலம் எடுக்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டின் போது இந் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன”.

(ஆ) 2012 ஏப்ரல் 23 ஆம் திகதி கபரகல காற்றடி கம்பம் நிர்மாணிப்பு முன்னேற்றமாக இடத்தைத் தேர்ந்தெடுத்தல் மாத்திரமே காணப்பட்டது. எவ்வாறெனினும், ஒப்பந்தக்காரரின் பொறுப்பில் காணப்பட்ட கம்பத்திற்கு உரித்தான உபகரணங்களும் உதிரிப்பாகங்களும் ரூபா 634,500 இற்கு மதிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக அதிகாரசபையின் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"கபரகல அளவீட்டு நிலையத்திற்கு அவசியமான பொருட்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. 2 மாதகாலத்தினுள் ஒப்பந்தக்காரர் நிர்மாணிப்பு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது."

(இ) உடன்படிக்கையின் 16 ஆவது பிரிவின் பிரகாரம், ஒப்பந்தக்காரர், ஆக்கக்கூறுகள் குறைபாடுகளோ அல்லது தேய்வுக்குட்படாதவை என 2 ஆண்டுகாலப்பகுதிக்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், அதிகாரசபை இப் பிரிவின் விடயங்களைக் கருத்திற்கொண்டிராததுடன் ஒப்பந்தக்காரர் குறைவான தரத்திலான மூலப் பொருட்களை தானாகவே ரூபா 461,440 இற்கு பெறுமதியிட்டு வழங்கியமை தொடர்பில் அதிகாரசபை பொறுப்பை ஏற்றுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

அதிகாரசபையின் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"துருப்பிடிக்கும் சுற்றாடலில் துருப்பிடிக்காத ஸ்டெயின்லஸ் ஸ்டீல் வயர்களைப் பயன்படுத்துவதற்கு ஒப்பந்தக்காரர் மாற்று நடவடிக்கைகளை முன்வைத்திருந்தார். அதிகாரசபை இந்த விலை உயர்ந்த மாற்று நடவடிக்கையை நிராகரித்து குறைந்தளவு ஸ்டீல் வயர்களின் துருப்பிடித்தல் தொடர்பான பொறுப்பு ஒப்பந்தக்காரர் மீது சுமத்தப்பட இயலாது."

(ஈ) உடன்படிக்கையின் 18 ஆம் 19 ஆம் பிரிவுகளின் பிரகாரம், அதிகாரசபையால் எதிர்பார்க்கப்படும் சகல இடர்களுக்கும் ஒப்பந்தக்காரர் காப்புறுதி செய்வதற்கு பொறுப்பாவதுடன் பேணப்படும் காலப்பகுதியின் போது உருவாகும் போர், சச்சரவு, புவி அதிர்ச்சி தவிர்ந்த சகல வகையான காப்புறுதியைச் செய்யக் கூடிய இடருக்காக ஒப்பந்தக்காரர் மேலும் பொறுப்புடையவராவார். எவ்வாறெனினும், இந் நியமங்களைக் கருத்திற்கொள்ளாது (இயற்கை அழிவினால் நிகழ்ந்ததாகக் கருதி) 2010 ஒக்டோபர் 07 ஆம் திகதி உடப்பு காற்று கம்பம் உடைந்து விழுந்ததன் விளைவாக ஏற்பட்ட சகல பிணைப்புகளில் இருந்தும் அதிகாரசபை ஒப்பந்தக்காரரை விடுவத்திருந்தது. ஆகையால் அதிகாரசபை ஒப்பந்தக்காரரின் தவறாக உறுதிப்படுத்துவதற்கு அந் நிலைமை தொடர்பாக ஆய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், காற்றை அளவிட்டதை அடுத்து உடைந்து வீழ்ந்த கம்பங்கள் உள்ள இடங்களைத் தேர்ந்தெடுத்துள்ளதாகவும் அடிப்படை ஆய்விற்காக

மக்களின் பணத்தை ஈடுபடுத்தியுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களில் இருந்து இவ் விடத்தில் புதிய கம்பத்தை மீள நிர்மாணிப்பதற்கு அதிகாரசபைக்கு அபிப்பிராயம் இல்லாமை கண்டறியப்பட்டது. ஆகையால் கம்பத்திற்குச் செலவிடப்பட்ட தொகை பயனற்ற நிலையில் இருந்தது.

(உ) உடன்படிக்கையின் 16 ஆம் பிரிவின் பிரகாரம், 12 மாத காலப்பகுதியில் செயற்படுத்தப்படுவதற்காக பிடித்து வைத்துக்கொள்ளப்பட்ட பணமாக அதிகாரசபை ஒப்பந்தத் தொகையில் 10% வைத்துக்கொள்ளப்பட வேண்டும். எனினும், மேற்குறித்த (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு 2012 ஏப்ரல் 23 ஆம் திகதிக்கு மேலும் ஆரம்ப சந்தர்ப்பத்தின் போது உள்ள கம்பத்திற்கும் 2009 மார்ச் 25 ஆம் திகதிக்கு 4 கம்பங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கையில் அதிகாரசபையால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 15,007,500 தொகை (அதாவது ரூபா 1,675,000 x 90% x 10) செலுத்தப்பட்டிருந்தது. ஆகையால் அதிகாரசபை செயற்திட்ட நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருந்து விலகியிருந்தமையால் பூர்த்திசெய்யப்பட்ட வேலைகளின் அளவீடுகளைப் பெற்றுக்கொள்ளாது கட்டம் கட்டமாக

செலுத்தப்படுவது கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதிருந்தது.

### 2.2.4 இலங்கையின் பல்வேறுபட்ட நிலத்தின் தரத்திற்கு ஏற்ற வகையில் உள்நாட்டு காற்று டேர்பைன் கற்கையை அபிவிருத்தி செய்தல்

உள்நாட்டு பெறுமதி சேர் வரியை அதிகரிக்கும் நோக்குடன் இலங்கையின் பல்வேறு நிலங்களுக்கு ஏற்றவகையில் காற்று மின்சக்திப் பரிமாற்ற முறைமையை திட்டமிட்டு அபிவிருத்தி செய்வதன் மூலம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி போட்டி விலையின் கீழ் மின்சக்தி உருவாக்கும் நோக்குடன் உள்நாட்டு காற்று டேர்பைன் உருவாக்கல் வளங்களை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்காகும்.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(2)(பீ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக, இலங்கையின் பல்வேறு நிலத்தின் தன்மைக்கு காற்றின் வலு உருவாக்கத்தின் போது உள்நாட்டு

பெறுமதி சேர் வரியை அதிகரிக்கும் நோக்குடன் வலு சக்தி வள அமைப்புகளை பன்முகப்படுத்தல்/ காற்று வலுசக்தி பரிமாற்றல் முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக 2010 மார்ச் 01 ஆம் திகதி அதிகாரசபை, தனியார் கம்பனியுடன் ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. கம்பனி செயற்திட்டத்தின் மொத்தக் கிரயமான ரூபா 40.80 மில்லியன் தொகைக்கு மதிப்பிட்டிருந்ததுடன் இதில் ரூபா 20.80 மில்லியன் தொகையை அதிகாரசபை ஏற்றிருந்தது.

(ஆ) உடன்படிக்கையின் 7 ஆம் பிரிவின் பிரகாரம், காற்று வலு டேர்பைன் அபிவிருத்திக்கான மொத்தக் காலப்பகுதியான 18 மாதங்களில் 12 மாதங்கள் காற்று வலுத் தொழிநுட்பத்தை மேம்படுத்தி 6 மாதங்கள் கள ஆய்விற்காக உட்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தம் முறையான காலநீடிப்பின்றி 22 மாதங்கள் பெறப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்டிருந்த மொத்தப் பணம் ரூபா 11.440 மில்லியன் தொகையானதுடன் இது ரூபா 20.80 மில்லியன் தொகையான ஒப்பந்தத் தொகையின் 55% ஆக் காணப்பட்டது.

(இ) உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட சில விடயங்கள் (உ+ம் காணிப் பெறுமதி மற்றும் அளவு) பெறுமதியிடும் அடிப்படை மற்றும் காரணங்கள் சந்தேகத்தை ஏற்படுத்துவதனால் அதிகாரசபையிடமிருந்து 50 சதவீதத்தைப் பெற்றுக்கொள்ளப்படுவது செயற்திட்டம் மொத்தக் கிரய மதிப்பீடு வெளிப்படையாக்கி நியாயப்படுத்துவது கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

### 2.2.5 ஏனைய செயற்திட்டம்

மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் மீள்சக்திப் பிரிவு, மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 197.3 மில்லியன் தொகைக்கு 24 நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எவ்வித நிதி மற்றும் பௌதீக முன்னேற்றமும் அடைந்திராததுடன் அந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக வருடாந்த பாதீட்டில் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 29.04 மில்லியன் தொகையாகியது. மிகுதி நிகழ்ச்சித்திட்டங்களிலும் குறிப்பிடத்தக்க அளவு நிதி மற்றும் பௌதீக அவதானிப்புகள் இருக்கவில்லை.

இது தொடர்பாக அதிகாரசபைத் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"பல்வேறு செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்ட பதவியணியைச் சார்ந்த செயற்பணிகள் துறை நிகழ்ச்சித்திட்டங்களை அதிகாரசபை ஒவ்வொரு ஆண்டும் திட்டமிடுகின்றது. இதன் பிரகாரம், குறிப்பிட்ட காலத்திற்கு திறைசேரிப் பணம் கிடைக்காமையால் இந் நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் ஸ்தாபிக்கப்படுவதற்கு நேர்ந்துள்ளது. இதன் விளைவாக பாதீடிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செயற்பாடுகளுக்கிடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டியளவு வீழ்ச்சியை எதிர்நோக்க வேண்டியுள்ளது."

## 2.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

சுவிஸ் - ஆசியா நிகழ்ச்சித்திட்டங்கள், இலங்கை வர்த்தக சம்மேளனம் ஐரொப்பிய சங்கத்தினால் நிதி வழங்கும் செயற்திட்டத்தின் மூலம் நிதியிடப்பட்டுள்ள செயற்திட்டத்தின் கீழ் கிறீனின் இலங்கை ஹொட்டேலுக்கான நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட பணத்தை மீளளிப்புச் செய்வதற்காக 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளின் போது அதிகாரசபைக்கு ரூபா 7,334,354 தொகை கிடைக்கப்பெற்றிருந்தது. 95 ஆம் இலக்க 1994 யூன் 04 ஆம் திகதிய அரச தொழில்முயற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் 2000 சனவரி 11 ஆம் திகதிய பீஎப்/பீஎப்/5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு முரணாக அந் நிதியத்தில் ரூபா 3,135,202 தொகை அதிகாரசபையின் சகல உத்தியோகத்தர்களுக்கு தொழிற்துறைப் படிப்பணமாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

## 2.4 மனித வளங்கள் முகாமைத்துவம் (எச்ஆர்எம்)

அதிகாரசபை, 2011 இலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் (DMS) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை ஆட்சேர்க்கும் செயற்பாடு இன்றி செயற்பட்டிருந்தது.

மேலும், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான பதவியணி முறையே 114 ஆகவும் 85 ஆகவும் காணப்பட்டது. வெற்றிடங்கள் 29 இல் 22 ஆகவும் அதாவது 76% ஆனவை முகாமைத்துவ மற்றும் அதற்கு மேலான மட்டத்திலான பதவிகளாகும்.

இது தொடர்பாக அதிகாரசபைத் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"நாங்கள் பதவியணி ஆட்சேர்ப்புத் தொடர்பாக விளக்கமான விபரத்தைத் தெரிவித்துள்ளதுடன் புதிய கட்டமைப்பு திட்டமிடப்படுகிறது. புதிய அமைப்பை வடிவமைப்பை விபரிப்பதற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு (SLIDA) தொடர்புபடுத்தப்பட்டுள்ளது."

## 2.5 கூட்டிணைந்த திட்டம்

முன்னைய கூட்டிணைந்த திட்டம் 2006 – 2010 காலப்பகுதிக்குரியதானதுடன் புதிய கூட்டிணைந்த திட்டம் 2012 – 2016 காலப்பகுதிக்கானதாகும். எவ்வாறெனினும், அதிகாரசபை 2011 ஆம் ஆண்டிற்காக கூட்டிணைந்த திட்டம் இன்றி செயற்பட்டிருந்தது.

## 2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமை பாதீடானது ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (7)(ஏ) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட எனது விபரமான அறிக்கையின் மூலம் அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்
(ஈ) கணக்கீடு
(உ) செயற்திட்டங்களின் அமுலாக்கல்
(ஊ) மனித வளங்கள் முகாமைத்துவம் (எச்ஆர்எம்)
(எ) பதவியணி கடன்
(ஏ) கொடுப்பனவு நடைமுறை